செ.வெ.எண்.20 நாள்: 08.10.2020

# தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வனத்துறையின் வன உயிரின வார விழாவையொட்டி "மன்னார் வளைகுடாவின் சதுப்பு காடுகளும் இயற்கை வளங்களும்" சிறப்பு பாடல் தொகுப்பு குறுந்தகட்டினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வனத்துறை தூத்துக்குடி மண்டலம் சார்பில் வன உயிரின வார விழாவையொட்டி மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பக அறக்கட்டளை மூலம் தயார் செய்யப்பட்ட "மன்னார் வளைகுடாவின் சதுப்பு காடுகளும் இயற்கை வளங்களும்" சிறப்பு பாடல் குறுந்தகடு வெளியீட்டு நிகழ்ச்சி இன்று (08.10.2020) நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டு, சிறப்பு பாடல் தொகுப்பு குறுந்தகட்டினை வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

வனத்துறையின் மூலம் ஆண்டுதோறும் வன உயிரின வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு வன உயிரின வார விழாவையொட்டி மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பக அறக்கட்டளை மூலம் தயார் செய்யப்பட்ட "மன்னார் வளைகுடாவின் சதுப்பு காடுகளும் இயற்கை வளங்களும்" சிறப்பு பாடல் குறுந்தகடு வெளியிடப்பட்டுள்ளது. இந்த குறுந்தகடு பள்ளி மாணவ, மாணவிகள் மன்னார் வளைகுடா உயிரினங்கள் பற்றியும், விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், அறிந்துகொள்ளும் வகையிலும் தயார் செய்யப்பட்டுள்ளது.

இக்குறுந்தகடு தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளிகள், பிற மாவட்டத்தில் உள்ள வன அலுவலகத்திற்கும், கடற்கரை கிராம பகுதியில் உள்ள சூழல் சுற்றுலா குழுவினருக்கும் மற்றும் பல்வேறு துறைகளுக்கும் அனுப்பப்பட உள்ளது. சிறப்பு பாடல்கள் மூலம் மன்னர் வளைகுடா பகுதியில் உள்ள சதுப்பு காடுகள் குறித்தும், இயற்கை வளங்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரோன் ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., வன உயிரின காப்பாளர் மற்றும் இயக்குநர் திரு.மாரிமுத்து, இ.வ.ப., உதவி வன பாதுகாவலர் திரு.பாலசுப்பிரமணியம், வனச்சரக அலுவலர் திரு.ரகுவரன், வனவர்கள் திரு.அருண்குமார், திரு.மதனகுமார், பாடல் இசையமைப்பாளர் திரு.இசக்கியப்பன் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.